**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 2016**

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், விரிவான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

கீழே காண்பிக்கப்படுகின்ற இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

(i) மீளாய்வாண்டின் வேறு மூலதன மானியம் மற்றும் அமைச்சின் மானியம் என்பன முறையே ரூபா 145,000,000 மற்றும் ரூபா 7,298,213 தொகைகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு நடவடிக்கைகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 27,439,483 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 42,626,212 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 15,186,729 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த தொகை, காசு செலவிடப்படாமல் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடைச் செலவினம் ரூபா 21,996,817 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 21,575,359 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 421,458 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட வியாபார செலுத்த வேண்டியவைகளில் இப்பெறுமதி சீராக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

சொத்தொன்றில் நியாயமான பெறுமதியில் கவனத்தில் கொள்ள முடியாத அளவில் வேறுபாடுகள் ஏற்படுமிடத்து சொத்துக்கள் ஒவ்வொரு 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்தல் போதுமான போதிலும், கூட்டுத்தாபனத்தால் 2007 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் அரச மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாகவும் மற்றும் பெறுமானத்தேய்வை சீராக்குவதற்கு உரியதாக கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 68 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்துவதற்கு தகுதியான நிலைக்கு உட்பட்ட திகதி முதல் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தால் அதற்கு முரணாக சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் போது முழு வருடத்திற்கும் பெறுமானத்தேய்வு செய்தல் மற்றும் விற்பனை செய்யும் வருடத்திற்காக பெறுமானத்தேய்வு செய்யாமை என்ற கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

(இ) சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கவனத்தில் கொள்ளப்பட்டு வருமாந்த பெறுமானத்தேய்வு விகிதம் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தால் தொழில்நுட்ப ரீதியான காரணத்தின் அடிப்படையில் விரைவாக காலாவதியாவதற்கு உட்படும் கணனி, துணைப் பாகங்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் சவனத்தில் கொள்ளப்படாமல் 10 வருட காலத்திற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களின் மூலம் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கங்கள் கணக்கீடு செய்தல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கடன்பட்டோரிடமிருந்தான அறவிடமுடியாக் கடனுக்கான ஒதுக்கீடுகளின் அளவை இனங்காணக்கூடிய வகையிலான கொள்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டிற்காக அறவிடமுடியாக் கடனாக ரூபா 11,008,838 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி முதல் 2013 யூலை வரை வாழ்க்கைச் செலவுப் படிக்காக பங்களிப்புப் பணம் செலுத்தியமையின் காரணமாக, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 5,110,189 மிகைக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் கட்டளையிடப்பட்ட ரூபா 28 மில்லியன் இயந்திரத்திற்குரிய ரூபா 8,800,000 தொகை மீளாய்வாண்டின் நடைமுறையல்லாச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டு செலுத்த வேண்டிய செலிவனங்களில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செலுத்த வேண்டிய செலவினம் அந்தப் பெறுமமதியினாலும், மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 880,000 இனாலும் மற்றும் நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 7,920,000 இனாலும், அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீன்பிடி மற்றும் நீர்த்தேக்க வளங்கள் திணைக்கள நிதியத்தின் அடிப்படையில் அந்த திணைக்களத்தின் ஊழியர்களின் பாவனைக்காக துறைமுக வளவில் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 7,169,938 பெறுமதியான 10 கொள்கலன் அலுவலகங்கள், கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்படாதிருக்கும் போது அந்த பெறுமதி நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டு ரூபா 1,433,988 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2015 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பீகன் விளக்குகளுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 217,000 குறைவாகவும் அதன் காரணமாக நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி அந்த அளவினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) கணனி மென்பொருள் அருவச் சொத்தாக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது நடைமுறைச் சொத்துக்களில் முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22 மீன்பிடித் துறைமுகங்களின் பௌதீக எரிபொருள் இருப்பிற்கும் புத்தக பெறுமதிக்குமிடையே கூட்டுமொத்தமாக ரூபா 7,968,739 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன், வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 03 மீன்பிடித் துறைமுகங்களுக்குரிய மொத்தச் செலவினம் தொடர்பாக பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுக்கும் இடையே ரூபா 253,101 வேறுபாடு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் 03 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான வங்கி மீதிக்கும் காசேட்டில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 15,901,732 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அவைகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| நிலையான சொத்துக்கள் | 5,008,512,962 | நிலையான சொத்து பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| இனங்காணப்படாத பெறுவனவுகள் | 2,215,769 | விரிவான பட்டோலைகள் |
| வைப்புக்கள் | 6,335,900 | |
| பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 1,653,400 | |
| பதிவழிக்கப்பட வேண்டிய மீதிகள் | 81,769,596 | |
| நடைமுறைவேலை | 24,572,784 | நடைமுறை வேலை தொடர்பான அறிக்கை |
| கடன்பட்டோர் மீதி | 350,780,522 | காலப் பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள் |
| நிறுத்தி வைத்தல் வரி | 2,526,034 | |
| கடன்கொடுத்தோர் மற்றும் முற்பணம் | 111,954,599 | காலப் பகுப்பாய்வு, விரிவான பட்டோலை மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு |
| அமைச்சு நிதியம் | 129,101,563 | |
| JICA நிதியம் | 19,992,903 | |
| அமைச்சு மானியம் | 53,812,853 | |
| திக்ஓவிட்ட மீன்படி துறைமுக நிர்மாண மானியம் | 3,143,094 | |
| திக்ஓவிட்ட நிதியம் | 4,644,670 | |
| விஷேட முற்பணம் (ஊழியர் கடன்) | 15,287,022 | |
| கிடைக்க வேண்டிய பெறுமதிசேர் வரி (வற்) | 23,498,619 | |
| மணல் வருமானத்தின் அடிப்படையில் கிடைக்க வேண்டிய பெறுமதிசேர் வரி (வற்) | 10,434,783 | |
| செயல்நிமித்த முற்பணம் | 16,343,630 | |
| முற் செலுத்துகைகள் | 36,721,143 | |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மணல் அகழ்வு செயற்திட்டத்திற்குரிய அரசாங்க நிறுவனத்திலிருந்து கிடைக்கவேண்டியதாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 269,960 பெறுமதி அந்த அரசாங்க நிறுவனத்தின் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததாக 2015 மார்ச் 02 ஆந் திகதிய WI/C/2013/43 ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அம்மீதி தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஆண்டின் இறுதியில் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், துறைமுகத்தால் செலுத்தப்பட்ட நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி செலவினங்கள், கட்டுப்பாட்டு கணக்குகளுக்குரிய 2013 ஆம் ஆண்டு முதல் ரூபா 2,459,127 கிடைக்க வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய வாடகை வருமானமாக காண்பிக்கப்பட்ட ரூபா 83,475,810 பெறுமதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 4,908,918 தொகையும், 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 5,983,577 தொகையும், 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 27,615,222 தொகையும் ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உரிய அறவிடப்படாதுள்ள மீதி ரூபா 44,968,093 தொகையும் காணப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் வரிசை அமைச்சிற்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்ற பாதுகாப்பு சேவைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மொத்த மீதி ரூபா 36,487,442 ஆக இருந்ததுடன் அந்த பெறுமதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 10,323,806 தொகையும், 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 11,142,999 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா 15,020,637 தொகையும் ஆக இருந்ததுடன் இந்த பணத்தை அறவிடும் நடவடிக்கைகள் மந்த நிலையில் காணப்பட்டது.

(உ) 05 வருட காலமாகக் கொண்டு வரப்படுகின்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் வரி ரூபா 10,512,971 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,056,700 தொகை மற்றும் 2015 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்தும் கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,287,022 தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நங்கூரம் கடன்பட்டோர் மீதி ரூபா 47,311,629 தொகையில் மோதர மீன்பிடித் துறைமுகத்தில் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையேயும் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்மீதி முறையே ரூபா 14,468,415 தொகை மற்றும் ரூபா 32,843,214 தொகைகள் காணப்பட்டதுடன் இந்த மீதியை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய கொட்பே மீன்பிடித் துறைமுகத்தில் சன்கென் கப்பலை அகற்றுவதற்குரியதாக பெற வேண்டிய ரூபா 2,150,000 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது.

(ஐ) இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 1,000,394 தொகையான ஊழியர் இடர்கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் கூட்டுத்தாபனத்தால் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 39,873 தொகையான சம்பள முற்பணமும், ரூபா 193,159 தொகையான பிரயாணச் செலவின முற்பணமும் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 137(5) | பொருள் கிடைத்தமைக்கு உறுதிப்படுத்தல் பெறப்படாமல் 2015 ஆம் ஆண்டின் போது 600 ரீ சேட் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 470,470 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 395(ஏ) | வங்கி இணக்கக்கூற்றுக்கள் சேகரிக்கின்ற பணத்தை வங்கியில் வைப்பிலிடல், காசோலை எழுதுதல் அல்லது காசேட்டைப் பேணிச் செல்லல் போன்ற எதனுடனும் தொடர்பின்றிய உத்தியோகத்தர் ஒருவரினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்திற்குரிய காசேட்டை பேணிச் செல்லல் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் இரண்டும் ஒரே உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 396 | காசோலை விநியோகித்த திகதி, அதன் செல்லுபடித் திகதி என்ற இரண்டின் பின்னர் வரும் திகதி முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 36,611 தொகையான காசோலை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iv) நிதிப்பிரமாணம் 446(2) | காசேடு, பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பிரகாரம், கால ஒழுங்கு முறையில் முறையே பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன், தினந்தோறும் சமம்படுத்தப்பட்டு மேற்பார்வையாளர் அல்லது பதவிநிலை உத்தியோகத்தரினால் கையொப்பம் இடவேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 751 | பொது 44 ஆம் கடிதத்தின் பிரகாரம் பொருட் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் 22 துறைமுகங்களை உள்ளடக்கிய தலைமை அலுவலகத்தின் உப அலுவலகத்திற்காக ரூபா 134,136,245 பெறுமதியான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்காக பொருட் பதிவேட்டுப் புத்தகமொன்று நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 99,705,372 பெறுமதியான கணனிகள் மற்றும் உபபாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) 2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கை பொறியியல் சேவைக்குரிய உத்தியோகத்தருக்காக ரூபா 15,000 படியொன்று உரித்தாக இருந்த போதிலும், முறையான அங்கீகாரமின்றியும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரமும் இலங்கை பொறியியல் சேவைக்குள் உள்ளடங்காத கூட்டுத்தாபனத்தின் 07 பொறியியலாளர்களுக்காக அந்த படியாக ரூபா 1,065,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | • மீளாய்வாண்டின் போது போக்குவரத்துப் படி பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற 21 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 5,000 வீதமும், 12 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1,500 வீதமும் ரூபா 1,476,000 கூட்டுப்பெறுமதியுமான போக்குவரத்துப்படி திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.<br><br>• பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரால் 2016 சனவரி மாதம் முதல் 2016 ஒக்தோபர் மாதம் வரை அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையினை விஞ்சி ரூபா 401,431 பெறுமதியான 3820 எரிபொருள் லீற்றர் மற்றும் உயர் முகாமைத்துவ தரத்தின் உத்தியோகத்தரொருவரினால் ரூபா 925,908 வெகுமதியான 9746.4 லீற்றர் எரிபொருள் என்பன பயன்படுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (iii) | 2015 மே 25 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளருக்கும் முகாமைத்துவ பணிப்பாளருக்கும் முறையே ரூபா 35,395 மற்றும் ரூபா 40,000 பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் கூட்டுத்தாபன செலவில் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 2(பீ) பிரிவு | பதவிநிலைத் தரத்தின் உத்தியோகத்தருக்கு ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கக்கூடிய பணத்தின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அதன் எல்லையை விஞ்சி 44 சந்தர்ப்பங்களின் போது திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி ரூபா 100,000 முதல் ரூபா 280,000 வரையிலான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 யூன் 29 ஆந் திகதிய PE/2015/04 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கை | பாராளுமன்ற பொதுத் தேர்தல் காலத்தில் உத்தியோகத்தர்கள், ஊழியர்களைச் சேர்த்தல், பதவியுயர்வு வழங்குதல் மற்றும் இடமாற்றங்களைச் செய்தல் முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணானதாக 2015 இன் பொதுத் தேர்தல் கால எல்லையில் கூட்டுத்தாபனத்தினால் 20 நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டல் கைநூலின் 2.7.5 ஆம் பிரிவு | ரூபா 1,815,800 பெறுமதியுடைய பீகன் விளக்குகளைக் கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகள் குழுவிற்காக அமைச்சின் பிரதிநிதி ஒருவரும் விடயம் தொடர்பில் நிபுணத்துவம் உடைய ஒரு நபரும் தொடர்புபடுத்தப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 இன் VII ஆம் பந்தி | பதிற்கடமைப் பதவியொன்று ஆகக்கூடியது 03 மாத காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தால் 03 உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையை விஞ்சி பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் மாத்திரம் பதிற்கடமை சம்பளமாக கூட்டுமொத்தமாக ரூபா 99,416 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 31,396,138 நட்டமாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 128,779,340 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 97,383,202 இனால் குறைவடைந்திருந்தது. நிருவாகச் செலவுகள் மற்றும் பதவியணி கிரயம் முறையே ரூபா 10,385,884 இனாலும் ரூபா 42,103,239 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் நடைமுறை மானியம் ரூபா 81,067,315 இனாலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 71,136,645 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நட்டம் குறைவடைந்தது தொடர்பில் முக்கியமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக நட்டத்தை பெற்றிருந்த போதிலும், அந்த நட்டம் ரூபா 258,826,672 முதல் ரூபா 31,396,138 தொகை வரை தொடர்ச்சியாகக் குறைவடைந்திருந்தது. எனினும், நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் 259,109,586 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக நேர்ப்பெறுமதியுடன் அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 813,998,510 ஆகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

கடந்த 05 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானத்தில் அரச மானியங்களின் பங்களிப்பு 44.36 சதவீதம் முதல் 88.66 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், சுயமாக உழைக்கப்பட்ட வருமானங்களின் பங்களிப்பு 55.63 சதவீதத்திலிருந்து 11.34 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 4.1 செயலாற்றல்

--------------------

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில்கள் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1997 மார்ச் 06 திகதிய சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் திருத்திய பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு.

- மீன்பிடி துறைமுகங்கள், நங்கூர தளங்கள், கடல் கட்டமைப்புக்கள் மற்றும் ஏனைய கடலோர வசதிகளைத் திட்டமிடல், திட்டங்களை வடிவமைத்தல், நிர்மாணவேலை வசதிகளை ஏற்படுத்தல், அமுல்படுத்தல், கட்டுப்படுத்தல், பராமரித்தல், முகாமைத்துவப்படுத்தல் மற்றும் அவற்றின் மூலம் மீன்பிடி தொழில் செய்வோருக்கு மற்றும் ஏனைய நபர்களுக்கு வழங்கப்படும் வசதிகளுக்காக பொதுவான துறைமுகக் கட்டணங்களை தீர்மானித்தல் மற்றும் அறவீடு செய்தல்.

- மீன்பிடி படகுகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வசதிகளை வழங்குதல்.

- குளிரறைகள், ஐஸ் இயந்திரங்கள், ஏனைய குளிரறை வசதிகளை நிறுவுதல் செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

- நீர், எரிபொருள், உராய்வு எண்ணெய்கள், மின்சாரம், ஐஸ் மற்றும் குளிர் அறை வசதிகள் வழங்குதல் மற்றும் மீன்பிடித் தொழிலுக்காக மற்றும் மீனவ தொழிலில் ஈடுபடுவோருக்கு தொடர்புடைய ஏனைய சேவைகள் வழங்கல்.

- மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரத் தளங்கள், கடல் கட்டமைப்புக்கள், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவை ஏற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் அதற்கான கட்டணங்கள், வாடகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அறவீடு செய்தல்.

- இலங்கையில் அடையாளம் காணப்பட்ட பொருளாதார வலயம் தொடர்பாக செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்புக்களை முன்னெடுத்தல்.

மீன்பிடி படகுகளுக்காக பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வசதிகள் வழங்குதல் என்பன கூட்டுத்தாபனம் அமைத்ததன் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாக இருந்த போதிலும், அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி அங்கீகாரத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திறகுப் பெறக்கூடிய ஆகக்கூடிய வங்கி மேலதிகப்பற்று பெறுமதி ரூபா 25 மில்லியனாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 40 மில்லியன் வரை மேலதிகபற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன் மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 2,821,768 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சயுரி படகு வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக 2016 ஆம் ஆண்டின் பெப்ரவரி 23 திகதி தனியார் கம்பனி ஒன்றுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம், உரிய படகினை தனது பொறுப்பில் வைத்திருக்கும் ஒரு நாளைக்கு ரூபா 200,000 வீதம் மீளாய்வாண்டின் போது 28 நாட்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,200,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றில் ரூபா 1,600,000 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி மேலும் அறவிடவேண்டிய எரிபொருள், நீர், ஊழியர் சம்பளம், மேலதிக நேர வேலை மற்றும் படி என ரூபா 1,409,960 தொகையும் உட்பட கூட்டுமொத்தமாக ரூபா 5,009,960 தொகையை அறவீடு செய்வதற்கு 2016 மே மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்கு வாடகை கொள்வனவு முறையின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 16 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கும் போது அவ்வாறு கொள்வனவு செய்யப்படாத அந்த தொகையில் ரூபா 11.7 மில்லியன் செலவில் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் பழைய வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) அமைச்சினால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு 20 வருடங்களை விட பழமையான டபள் கப் வாகனத்தின் உரித்தைக் கையேற்காமல் 2015 யூலை 14 முதல் 2016 செப்தெம்பர் 02 வரையான காலத்தில் ரூபா 553,572 செலவில் முழுமையாக பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் கனவரி முதல் ஆகஸ்ட் வரை 15,640 கிலோமீற்றர் மாத்திரம் ஓட்டப்பட்டிருந்ததுடன் மீண்டும் இந்த வாகனத்தின் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு ஏற்பட்டமையின் காரணமாக தலைமை அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் வழங்கல் பிரிவில் கடமைச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கும் போது அரசாங்கத்தின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பாக பெண் எழுதுவினைஞர் உத்தியோகத்தரால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடாமலும், ஒழுக்காற்று பரிசோதனையின்றியும் 2014 மே 05 முதல் அவர் மீண்டும் அந்த பிரிவிக்கே நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஊ) 2016 ஆம் ஆண்டிற்குரிய 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பிரிவின் பிரகாரம் சகல பொது முயற்சிகளும் அதன் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டிற்கும் மேற்பார்வைக்கும் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவொன்று பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனம் அதற்கு இணங்காதிருந்ததுடன் அதன் செயலாற்றல் தொடர்பாக பணிப்பாளர் சபை சரியான மதிப்பீட்டை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அக்காலத்தில் தொடர்ச்சியாக நட்டத்தை பெற்றிருந்தது. 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக தாமதமின்றி ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபையும் உயர் முகாமைத்துவமும் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.3 தொழிற்படு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கடன் உதவியின் கீழ் ரூபா 224 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சிலாபம் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாட்டு விடயங்கள் 2009 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த, போதிலும் 2017 மே மாதம் வரை மீன்பிடித் துறைமுகம் ஒன்றில் இருந்து நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை குறிக்கோளாகிய மீனவர்களுக்கு உதவி வழங்கல் இடம்பெற்றிருக்கவில்லை. 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை துறைமுகத்தின் செயற்பாடுகளின் மூலம் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 53,777,748 தொகையாக காணப்பட்டமையால் கடன் உதவியின் மீது நிர்மானிக்கப்பட்டிருந்த இந்த துறைமுகம் தொடர்பாக செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன் மற்றும் அதற்கான வட்டியை செலுத்துதல் அரசாங்கத்திற்கு செலவினப் பொறுப்பாக உள்ளது.

(ஆ) கிரிந்த துறைமுகத்தில் இருந்து மணல் அகற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டின் யூன் மாதத்தின் போது கூட்டுத்தாபனத்துடன் தனியார் நிறுவனமொன்று உடன்படிக்கை செய்திருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் 08 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு ரூபா 200,000 தொகையான வைப்பு நிறுவனத்திற்கு கையேற்றல் மேற்கொள்ளப்படாமல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மணல் அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு 2015 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முதல் அந்நிறுவனத்திற்கே கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பணிகளும் கைவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீன்பிடிப் படகுகளுக்கு துறைமுகத்திற்கு நெருங்க முடியாதிருந்தமை மற்றும் மீனவருக்கு வசதிகளை வழங்குதல் என்ற நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 21 மீன்பிடித் துறைமுகங்களில் 15 துறைமுகங்களிலும் மீளாய்வாண்டில் ரூபா 170,740,291 செயற்பாட்டு நட்டத்தை பெற்றிருந்ததுடன் அந்த சகல துறைமுகங்களும் முன்னைய ஆண்டின் போதும் நட்டத்தைப் பெற்றிருந்தது. பூறானவெல்ல, குடாவெல்ல, சிலாபம், தங்காலை மற்றும் நில்வெல்ல போன்ற மீன்பிடித் துறைமுகங்களில் செயற்பாட்டு நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 104 சதவீதம், 328 சதவீதம், 35 சதவீதம், 18 சதவீதம் மற்றும் 10 சதவீதங்களால்

அதிகரித்திருந்தன. நட்டத்தை பெறுகின்ற துறைமுகங்களில் நட்டத்தைப் பெறுவதற்கான காரணத்தை ஆய்வு செய்து இலாபம் பெறும் நிலைக்குக் கொண்டு வருதல் அல்லது நட்டத்தை குறைப்பதற்கும் மற்றும் இலாபம் குறைவாகக் காணப்படுகின்ற துறைமுகங்களில் அதனை அதிகரிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இனங்கண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாணந்துறை துறைமுகத்தில் மணல் அகற்றுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது அங்கீகாரமின்றி தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை செய்து பிணைக் காப்பீட்டையும் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 20,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம், அகழ்ந்தெடுக்கப்படும் மணலை விற்பனை செய்து பெறுகின்ற பணத்தில் அகழ்வுக் கட்டணம் ஈடுசெய்யப்பட வேண்டிய போதிலும், மணல் அகழ்வு மேற்கொள்ளப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்தப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) கடந்த 05 ஆண்டுகளில் மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 73 சதவீதத்தை உழைத்த மோதரை மீன்பிடித் துறைமுகம், 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் 25 வருட காலத்திற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 1.421 ஹெக்டேயர் அளவான காணி மற்றும் அதன் கட்டிடம் என்பவற்றை வாடகைக்கு வழங்கும் அரசாங்கத்தின் மதிப்பீடு ரூபா 1,700,000 ஆக இருந்த போதும் அதனைக் கவனத்தில் கொள்ளாமல் மாதாந்தம் ரூபா 125,000 வீதம் வாடகைக்கு வழங்கப்படாமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 18,900,000 தொகையை கூட்டுத்தாபனம் இழந்திருந்தது.

(இ) கொட்பே மீன்பிடித் துறைமுகத்திற்குச் சொந்தமான 100 தொன், நீர் மிதவை 6 மாத காலத்தில் பழுதுபார்க்கப்பட்டு வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதற்காக தனியார் தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 06 மாத வாடகைப் பணத்திற்கு பழுதுபார்த்தல் செலவினம் ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும், 03 வருடங்களைக் கடந்த போதும் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீர் மிதவை பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தது.

### 4.5 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்தல்

06 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து ரூபா 312,804 பெறுமதியான 06 வங்கிக் கணக்குகளின் மீதிகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டம்

ஹிக்கடுவ மீன்பிடித் துறைமுகத்தில் படகு செல்லும் போது 2016 நவம்பர் 06 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்த சயூரி படகு காப்புறுதி செய்யப்படாமையின் காரணமாக விபத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்காக ஏற்பட்ட ரூபா 5,800,000 தொகையினால் நிறுவனத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.7 முறையான பிரகாரம் கையேற்கப்படாத காணி

கூட்டுத்தாபனத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 21 மீன்பிடித் துறைமுகங்களில் 06 துறைமுகங்களுக்குரிய காணிகள் மாத்திரம் கையேற்கப்பட்டிருந்ததுடன் ஏனைய முறைமுகங்களில் காணிகள் கையேற்கப்படாமல் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 05 வாகனங்கள் அமைச்சரின் செயற்பாடுகளுக்காக சாரதியுடன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் மற்றும் சாரதி சம்பளமாக கூட்டுமொத்தமாக ரூபா 720,595 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 13,585,685 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 3,723,677 தொகை கிடைக்க வேண்டிய மீதியாகக் காணப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் 19 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 11,469,168 சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய சம்பளத்தை அந்நிறுவனங்களிலிருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் சேவையிலிருந்து நீக்கிய உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவைக்கு எடுக்காமைக்கு திணைக்கள தலைவர் கண்காணித்து கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக 2012 சனவரி 04 ஆம் திகதி முதல் மனித வள முகாமையாளர் பதவிக்காக அரசாங்க நிறுவனமொன்றினால் முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நீக்கப்பட்டிருந்தார்.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பந்திக்கு முரணாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

(i) 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்காக ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வுகள் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் மீளாய்வாண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 இன் பிரகாரம் சம்பளத்திற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நிதி முகாமையாளர் பதவிக்காக 34 சம்பள அதிகரிப்புக்களும், கனிஷ்ட முகாமையாளர் மட்டத்தின் பதவியான பிரத்தியேக உதவியாளர் பதவிக்காக தகுதிகாண் காலம் கடப்பதற்கு முன் 15 சம்பள அதிகரிப்புகளும் ஒரே தடவையில் வழங்கப்பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளிலும் பிழையான சம்பள படி நிலைகளில் நிறுத்தியமை மற்றும் இரண்டு சட்ட உத்தியோகத்தர்களுக்கு ரூபா 10,000 வீதம் விஷேட படியும் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆகஸ்ட் 02 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்ட இணைப்பாளர் பதவிக்கு ஒரு வருட காலத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளுக்கு முரணாக மாதமொன்றிற்குள் பிரதி முகாமையாளர் பதவியில் நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம், ஒப்பந்தக் காலத்தில் அவரின் வினைத்திறன் மற்றும் அருகதை தொடர்பாக பரிசோதனைக்குட்படுத்தப்படாமல் 2012 சனவரி 06 ஆந் திகதி ரூபா 21,255 சம்பள படி நிலையில் வைத்து சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தார்.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவிற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்குப் புறம்பாகவும் குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாகவும் 349 நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 4.10 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 128 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் சுதந்திரமாக கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களத்தில் வலுவான உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 21 மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து ஒட்டுமொத்த இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவில் 2013 ஆம் ஆண்டு முதல் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக ஆட்சேர்ப்பதற்கு அதிகாரத் தரப்பினரால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் மூன்று முகாமைத்துவ உதவியாளர்களையும் உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்காக 2016 நவம்பர் வரையிலும் சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 15,034,728 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக 03 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. மேலும், முகாமையாளரால் அந்த அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான நோக்கமாக திணைக்களத்தின் நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக காணப்படுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கு பங்களித்து அச்செயற்பாடுகளின் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் வெளியிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற உள்ளக பரிசோதனைகளை முறையானதாகவும் போதியளவாகவும் தொடர்ச்சியாக ஆய்வு செய்தல் மற்றும் சுதந்திரமான மதிப்பீடொன்றைப் பேணிச் செல்லல் என்பன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த பிரிவின் மூலம் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 யூன் 06 ஆந் திகதிய டீஎம்ஏ2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவு வருடமொன்றிற்குள் ஆரம்ப மற்றும் பொழிப்பு அறிக்கை இரண்டையும், காலாண்டு ரீதியாக நான்கு அறிக்கைகளையும் தயாரித்து அந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காயவாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்டீ/2009/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் சொத்துக்களை அறிக்கையிடல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை இந்த நிறுவனங்களின் சொத்துக்கள் தொடர்பாக முறையான அறிக்கையொன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 58 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தால் 2016 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வு திகதியான 2017 ஏப்ரல் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒவ்வொரு செயற்பாடுகளுக்காவும் ஆன நோக்கங்கள், விடயப்பரப்பு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை உள்ளடக்கிய விரிவான திட்டம் மற்றும் பாதீட்டை உள்ளடக்கி அது தயாரிக்கப்படாமையின் காரணமாக முறையான கட்டுப்பாடொன்றையும் பேணிச்செல்வதற்கு முடியாதிருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆண்டின் இறுதியில் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை, ஆண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட நிதிப்பாய்ச்சல் கூற்று, மதிப்பிடப்பட்ட வருமானச் செலவினக்கூற்று, மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் என்பவற்றுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்யும் போது 20 சதவீதம் முதல் 490 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் அவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

## 5.5 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2014 பெப்ரவரி 18 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) நட்டத்தில் இயங்கும் துறைமுகங்களை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு, அதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து இலாபமீட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 31 கூட்டுத்தாபன ஊழியர்கள் தொடர்பாக பெறவேண்டிய அங்கீகாரம், சேவையினை நிறுத்துதல் தொடர்பாக தற்போதைய நிலை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. குழுத் தீர்மானத்திற்கு முரணாக 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 19 ஊழியர்களுக்காக மேலும் ரூபா 11,469,168 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட எரிபொருளுக்காக அறவிடல் மற்றும் 10 வழக்குகளின் விசாரணை தொடர்பாகவும் மற்றும் அறவிடப்பட்ட கடன் மீதி தொடர்பாகவும் தற்போதைய நிலை தொடர்பான அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடனுக்கு எரிபொருள் வழங்குதல் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அக்குழுவின் தீர்மானத்திற்கு முரணாக மீளாய்வாண்டு வரையும் கடந்த 02 வருடங்களுக்காக ரூபா 69 மில்லியன் எரிபொருள் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(உ) மோதரை மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரம் இடும் படகுகளில் இருந்து நங்கூரக் கட்டணமான ரூபா 5,675,373 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 முதல் 2017 ஆம் ஆண்டு வரையும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) திறைசேரிச் சுற்றறிக்கைகளுக்கு முரணாக சம்பள அதிகரிப்பு செலுத்தப்பட்டமை தொடர்பாக முகாமைத்துவத்தால் அதன் தவறுகளை சரி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள படிமுறைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சரியான சம்பளத் தொகுதியைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முற்கொடுப்பனவு முற்பணங்களின் செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை மற்றும் குழுத் தீர்மானம் என்பவற்றை அமுல்படுத்தாமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ரூபா 5,065,075 பெறுமதியான 06 எரிபொருள் தாங்கிகளை வழங்குவதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 2,791,215 முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அந்த எரிபொருள் தாங்கி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெறாமை தொடர்பாக அதற்குப் பொறுப்பான வழங்கல் முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆலோசனையின் பிரகாரம், ஒழுக்காற்று பரிசோதனையின்றியும் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடாமலும் அந்த வழங்கல் முகாமையாளர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஊழியர் கடன் முகாமைத்துவம் | ரூபா 51,872,213 கூட்டுப்பெறுமதியான ஊழியர் கடன், சம்பள முற்பணக் கடன் மற்றும் மருத்துவ உதவிக் கடன் என்பன தொடர்பான கடன் பதிவேடுகள் முறையான பிரகாரம் பேணப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதில் தாமதம் காணப்பட்டமை. |
| | (ii) மீளாய்வாண்டின் நிதிசார் அதிகாரங்கள் கையளித்தல் எல்லைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் நிதியாண்டு ஆரம்பித்து 03 மாதகால தாமதத்தின் பின்னர் பெறப்பட்டிருந்தது. |
| | (iii) பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற இனங்காணப்படாத கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளை இனங்கண்டு அறவிடுவதற்கும் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | (iv) ஒவ்வொரு கடன்பட்டோருக்கும் உரிய மதிப்பிழந்த காசோலைகள் அந்தந்த கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

(v) வங்கி மேலதிகப்பற்று வசதி பெறக்கூடிய எல்லையை விஞ்சி மேலதிகப் பற்று பெறப்பட்டமையால் மேலதிகப்பற்று வட்டியாக பாரியளவில் செலுத்த வேண்டி ஏற்பட்டமை.

| | | |
|---|---|---|
| (இ) | கணக்கீடு | நிதிக்கூற்றுக்கள் குறித்த காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஈ) | வருமானக் கட்டுப்பாடு | வருமானத்தை அறவிடுதல் பலவீன நிலையில் காணப்பட்டமை. |
| (உ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றியும் சம்பள அதிகரிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் ஆட்சேர்ப்பு வெளிப்படையின்றி மேற்கொள்ளப்பட்டமை. |
| (ஊ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை மற்றும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (எ) | உள்ளகக் கணக்காய்வு | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படாமை. |